

# க்ராண்ட் மாஸ்டர்களின் மாஸ்டர்

## செஸ் குருகுல் ரமேஷ்





அமைதியான தெரு அது. அங்கு பி.ஜே.பி.யின் அலுவலகமும் உண்டு. கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகமும் உண்டு. அங்கு ஒரு சிறிய எளிமையான அடுக்கு மாடிக் கட்டிடத்தில், ஒரு வீட்டில் கலகலப்பு, மகிழ்ச்சி கலந்த இரைச்சல். சுமார் 40 வயது நிரம்பிய உயரமான மனிதர் இன்முகத்துடன் நம்மை வரவேற்கிறார். “குட்டிஸ், அமைதி”, என்று கண்டிப்பான அதே சமயத்தில் பாசம் நிறைந்த குரலில், முகத்தைத் திருப்பி சிறார்/சிறுமியரிடம் கூறுகிறார். சதுரங்கம் ஆடும் குழந்தைகள் நிரம்பிய அவ்வீட்டின் நேர்மறை சக்தி உள்ளே நுழைந்தவுடன் அனாயாசமாக நம்மைத் தாக்குகிறது;ஆட்கொள்கிறது.

மிக இயல்பான சூழல், சதுரங்கக் கடிகாரத்தின் ஓசை, அன்னியர்களின் வரவையும் பொருட்படுத்தாது தங்களின் சதுரங்க உலகில் ஆழ்ந்து கிடக்கும் குழந்தைகள், இவை அனைத்தும் ஒருசேர நமக்குத் தெரிவிப்பது இதுதான் - இது ஒரு சாதாரண ‘பயிற்சிப் பள்ளியோ’ அல்லது நம்மை இன்முகத்துடன் வரவேற்றவர் ஒரு சாதாரண பயிற்றுநரோ அல்ல!

பொதுமக்களிடையே மிகப் பி ரபலமான விளையாட்டுகள் தந்த தாக்கத்தில் வளர்ந்த நமக்கு, ‘க்ராண்ட் மாஸ்டர்’ ஆர்.பி.ரமேஷ், அவர் நடத்தும், ‘செஸ் குருகுல்’ உடன் செய்த/செய்து வரும் பயணம், மிகவும் சுவாரசியமானது மட்டுமல்லாமல், வரவேற்கத்தக்க ஒரு நிவாரணமும் கூட.

ரமேஷும், அவரது மனைவியும் முதலாவது மாணவியுமாகிய ‘கிராண்ட் மாஸ்டர்’ ஆர்த்தி ராமசாமியும், சதுரங்கத்தைப் பற்றியும், திரு.விஸ்வநாதன் ஆனந்த் மீது அவருக்கிருக்கும் அபிமானம் பற்றியும், சதுரங்கம் ஆட உந்தியது எது என்பது பற்றியும் ஆர்வத்துடன் விவரிக்கிறார்கள். கிரிக்கெட் ஆடும்பொழுது ஏற்பட்ட தலைக்காயத்தினால், அந்த விளையாட்டை விட்டுவிட்டு, சதுரங்கம் ஆட ஆரம்பித்தார் ரமேஷ்.அப்பொழுது அவருக்கு வயது 12. விஸ்வநாதன் ஆனந்தின் தொடர்ந்த வெற்றிகள் அவருக்கும் பெரும் ஊக்கத்தைத் தந்தன. அப்பொழுது சதுரங்கத்திற்கான மென்பொருள் இல்லை;இந்தியாவில் தரமான புத்தகங்களும் இல்லை. சதுரங்கம் சம்பந்தமான புத்தகங்களை வெளி நாட்டில்தான் கிடைத்தன.இந்தியாவிற்கு இறக்குமதி செய்ய வேண்டுமானால் நிறையவே செலவழிக்க வேண்டும். சதுரங்க விளையாட்டில் நன்கு தேர்ச்சியடைய ரமேஷ் எவ்வளவு முயற்சி செய்து தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு இதுவே சான்று.

1990 ஆம் ஆண்டிற்குப் பிறகு, சர்வதேசப் போட்டிகள் இந்தியாவில் நிறைய நடைபெறத் தொடங்கின. தனது 16ஆம் வயதில்,18-வயதிற்குக் கீழுள்ளவர்களுக்கான தேசியப் போட்டியில் முதலாவதாக வந்தார் ரமேஷ். பெரும் முயற்சி செய்து, கடினமாக உழைத்து, 2003ஆம் ஆண்டு ‘க்ராண்ட் மாஸ்டர்’ பட்டத்தை வென்றார்.ஆர்த்திக்குப் பயிற்சி கொடுத்து, அவர் 18-வயதிற்குட்பட்டவர்களுக்கான சர்வதேச வீராங்கனையாக ஆனதும் அவருக்குப் பெரும் ஊக்கத்தைக் கொடுத்தது.தாமும், வெற்றிகரமான பயிற்றுநர் ஆக முடியும் என்ற நம்பிக்கையையும் அளித்தது. அவரது மாணாக்கர்கள் போட்டிகளில் தொடர்ந்து வெற்றிவாகை சூடி வந்ததும், விளையாட்டு வீரராக இருந்தவர், மெதுவாகப் பயிற்றுநராக மாறினார்.

தமது விளையாட்டுத் திறமையினால் கிடைத்த இந்தியன் ஆயில் துணை மேலாளர் வேலையை விட்டு, முழு நேர பயிற்சியாளாராக ஆனது மிகத் துணிகரமான ஒரு முடிவு. வங்கிக் கணக்கில் மிகக் குறைவான பணம் இருந்தாலும், வருங்கால இளைஞர்களின் வாழ்வை வளமாக்க முடியும் என்ற நம்பிக்கைகீற்று நெஞ்சங்களில் பளபளக்க, ரமேஷும், ஆர்த்தியும் ‘செஸ் குருகு’ல்லை 10 வருடங்களுக்கு முன் 2008ஆம் ஆண்டு ஒரே ஒரு மாணாக்கனுடன் தொடங்கினார்கள். ‘செஸ் பள்ளி’ தொடங்கும் எண்ணம் தனக்கு உதித்த உடனேயே, ஊக்கம் அளித்த ஆர்த்திதான் தனக்கு ஒரு பக்கபலமான தூண் என்று சிலாகிக்கிறார் ரமேஷ். நிதிப் பற்றாக்குறை இன்று வரை வராமல் இருப்பதற்குக் காரணமும் ஆர்த்திதான். ஏர் இந்தியா நிறுவனத்தில் பணி புரிகிறார் அவர். செஸ் குருகுல்லின் அலுவலகம் தொடர்பான விஷயங்களையும் அவர் கவனித்துக் கொள்கிறார். ரமேஷின் பலத்தை நன்கு அறிந்தவராகையால், ஒரு சிறந்த பயிற்றுநராக அவர் மிளிருவார் என்று தீவிரமாக நம்பினார் ஆர்த்தி. இன்று, 8 முதல் 18 வயது நிரம்பிய சிறார்கள், 30க்கும் மேற்பட்ட பதக்கங்களை சர்வதேச அரங்கில்- ஆசியப் போட்டிகள், காமன்வெல்த் போட்டிகள் உள்பட- வாங்கி வருகிறார்கள். ஏனைய பிற நாட்டினர் ஒட்டுமொத்தமாக வாங்கியதை விட, செஸ் குருகுல் மாணவர்கள் அதிகமான பதக்கங்களை வென்றிருக்கிறார்கள்.

அமெரிக்கா உட்பட்ட பல நாடுகளிலிருந்தும் , கணினி மூலம் நேரடித் தொடர்பில் வர, ரமேஷின் நாள் அதிகாலை 4 மணிக்குத் தொடங்குகிறது. இதில் பல மாணவர்கள், சர்வதேசப் போட்டிகளில் பங்கு பெறுபவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. 365 நாட்களும் திறந்திருக்கும் ‘செஸ் குருகுல்லின் மாணவர்களின் பள்ளிகள், அவர்களின் ‘சிறந்த விளையாட்டு வீரராக ஆக வேண்டும்’ எனும் ஆர்வத்திற்கு அணை போடாமல், ஆதரவு தருவதால், அவர்களால் முழுமனத்துடன் சதுரங்க விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட முடிகிறது.

ரமேஷைப் பொறுத்தவரை 5 முதல் 8 வயதே சதுரங்கப் பயிற்சி தொடங்க சரியான சமயம் - திறமை, ஆர்வம், விருப்பம், விடாமுயற்சி -இவையாவும் ஒரு குழந்தையிடம் இருக்கும் பட்சத்தில். சதுரங்கம் சார்ந்த தனித்திறன், கற்றுக்கொள்ளும் தனித்திறன், இவை கண்டிப்பாக சதுரங்கத்திற்கு வேண்டும் என ரமேஷ் திடமாக நம்புகிறார். ‘சதுரங்கம் உளவியல் சார்ந்த ஒரு விளையாட்டு, இதில் 50 சதவிகிதம் மனம், 50 சதவிகிதம் விளையாட்டுத் திறன்’, என்று கூறுகிறார் ரமேஷ்., ‘விளையாட்டினை மகிழ்ச்சியுடன் நுகருங்கள், வெற்றி/தோல்வி பற்றி பிறகு பார்த்துக் கொள்ளலாம்’ என்பதே அவர்களது





மாணாக்கர்களுக்கு அவர் முதலில் கூறுவது. செயல் நிறைவேற்றத்தை விட முக்கியமானது மனத் திண்மை!

கணினி மென்பொருள் உதவியுடன் பயிற்சி நடந்தாலும், கணினியை மட்டுமே முழுவதும் சார்ந்திருப்பதில்லை இவர்கள். மாணாக்கர்களை,மனத்திற்குள் முதலில் ஆட வைக்கிறார் அவர். இது, பலகையில் காய்களை நகர்த்துவதை விட கடினமான ஒரு செயல்.

சமீபத்தில் மும்பையில் செஸ் குருகுல்லின் கிளையைத் துவக்கியிருக்கிறார் ரமேஷ்.

சென்னை 'சதுரங்கத்தின் தலைநகரம்' என்று பெருமிதம் ததும்பக் கூறுகிறார் இவர். முதலாவது சர்வதேச மாஸ்டர் மேனுவல் ஆரான், விஸ்வநாதன் ஆனந்த், இன்னும் பல க்ராண்ட் மாஸ்டர்களைத் தந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரம் சென்னை. சக்தி வாய்ந்ததொரு அமைப்பாகிய 'தமிழ்நாடு சதுரங்க கூட்டமைப்பு' (Tamil Nadu Chess Association) பல வருடங்களாகப் போட்டிகளை நடத்தி வருகிறது. சோவியத் யூனியன் உடைந்ததற்கு முன்பாக, ரஷ்ய தூதரகத்தில் இருந்த 'டால் செஸ் க்ளப்'(Tall Chess Club), சென்னையிலுள்ள சதுரங்க விளையாட்டு வீரர்களுக்கு ஒரு வரப்ரசாதமாக இருந்தது. பல இந்திய வீரர்கள் திறனுடன் இருப்பதால், சர்வதேச சதுரங்க அரங்கில் முன்னணியில் இருக்கும் சில நாடுகளில் இந்தியாவும் ஒன்று' என்றும் 'எதிர்காலம் இன்னும் வளமாகவே' இருப்பதாகவும் கூறுகிறார் ரமேஷ்.

க்ராண்ட் மாஸ்டராகும் ஒருவருக்கு மத்திய, மாநில அரசுகள் ஊக்கத்தொகை வழங்கி வருவதும், ஆசிய, காமன்வெல்த் மற்றும் சர்வதேசப் போட்டிகளில் முதல் மூன்று இடம் பிடிப்பவர்களுக்கு, மத்திய அரசு, போக்குவரத்து மற்றும் தங்கும் செலவுகள் அனைத்தையும் ஏற்பதும், விளையாட்டு வீரர்களுக்கு மிகவும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் வழங்குவதாக ரமேஷ் மேலும் ஆர்வத்துடன் தெரிவிக்கிறார்.

சமுதாயத்தில் அடிநிலையில் இருக்கும் திறமை மிக்க சதுரங்க வீரர்களுக்கு, அவர்கள் போட்டிகளில் பங்கு பெற நிதியுதவி செய்ய 'செஸ் குருகுல் அறக்கட்டளை'யை நிறுவியிருக்கிறார் ரமேஷ்.மேலும், இம்மாதிரி வீரர்கள் முன்னுக்கு வருவதற்காக, அவர்கள் போட்டிக்குச் செல்லும்பொழுது ஆகும் அனைத்து செலவுகளுக்கும் நிதியுதவி செய்கிறார்கள் இவரின் நண்பர்கள் சிலர். இந்த சிறார்களிடம் அவர் கட்டணம் ஒன்றும் வாங்குவதும் இல்லை.

வியாபார நோக்குடன் நடத்துவதில்லை இவர் பயிற்சிகளை.எனவேதான், பல்வேறு கிளைகளும் திறக்கவில்லை. தற்பொழுது இருக்கும் அமைப்பை வைத்தே திறமையான இளைஞர்களை, திறன் மிகுந்த சதுரங்க விளையாட்டு வீர்ராக ஆக்குவதே இவரது நோக்கம்.

அனாயாசமாகப் பல்வேறு நாடுகளுக்கும் விளையாடுவதற்காகச் சென்று, வெற்றிவாகை சூடிக் கொண்டிருக்கும் மாணாக்கர்களுடன் அளவளாவினோம். 16 வயதுக்குட்பட்ட உலகப்போட்டியில் முதலிடம், 3 தேசிய பட்டங்கள், 2 ஆசிய பட்டங்கள் என்று வாங்கிய ஆகன்ஷா, இன்டெர்நாஷனல் மாஸ்டரும் ஆவார். பொறியியல் படித்ததால் சதுரங்கப் பயிற்சி தடைப்பட்டாலும், மறுபடி சதுரங்கத்திற்குள் வந்து காமன்வெல்த் போட்டியிலும் இன்னும் பல போட்டிகளிலும் வெற்றி பெற்ற மிஷ்ஷெல், செஸ் குருகுல்தான் கற்றுக்கொண்டு பரிமளிக்கச் சிறந்த இடம் என்கிறார்.

எல்லாவற்றிகும் முத்தாய்ப்பு, கண்களில் துறுதுறுப்பு மின்ன, பெருந்திறனுடனும், சக்தியுடனும் இருக்கும், 12 வயதேயான ப்ர்க்ஞ்சானந்தா. 10 வயதில் உலகின் மிக இளைய 'இன்டர்நாஷனல் மாஸ்டரான' இவர், மிக சமீபத்தில் உலகிலேயே இரண்டாவது இளவயது க்ராண்ட் மாஸ்டரானார்.

செஸ் குருகுல்லில் இருக்கும் ஒவ்வொரு குழந்தையும், ஏதோ ஒரு வகையில் சாதித்து இருந்தாலும், 'இது ஒரு சாதாரணமான விஷயம்' என்பது போல் ரமேஷ் பேசுவது நம்மிடம் பெரும் தாக்கத்தை உண்டாக்குகிறது. அவரது அடக்கம் இதிலிருந்து நன்கு புலனாகிறது. பயிற்றுநராக, மந்திரக்கோல் வைத்து பல கிராண்மாஸ்டர்களை உருவாக்கும் ஒரு மந்திரவாதியாக, பல விஷயங்கள் இவருள்ளே அடங்கியிருப்பது நிதர்சனம். சென்னைக்குப் பெருமை சேர்க்கும் இந்த முதன்மை சார்ந்த வெற்றி வீரர் மேலும் பல வெற்றிகளைக் குவிக்க நமது வாழ்த்துகள்!